1972 சனவரி 29]

குறிப்பிலே, அந்த இடத்தில் இருக்கும் பள்ளியில் வெறும் 27 மாணவர்கள்தான் இருப்பதாகக் கூறுகிறார்கள். அதிலும் சுற்றுவட்டாரத்தில் இருப்பவர்கள் அந்த மாணவர்கள் விடுதி அவசியமில்லை என்று அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். எனவே அதை வைத்து அதன்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

காகித தொழிற்சாலைகள்

135 வினா.—திரு. கு. அ. பொம்மன்:*** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூரில் காகித தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தும் சாத்தியக்கூறுகளை ஆராயும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை

(இ) வினாவுக்கு இடமில்லை.

திரு. கு. அ. பொம்மன்: தலைவரவர்களே, இம்மாவட்டம் தொழிற்சாலையில் மிகமிகப் பின்தங்கியிருப்பதாலும், அந்தத் தொழிற்சாலைக்குப் போதிய கச்சாப் பொருள்கள் நிறைய இருப்பதாலும், வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னையை ஓரளவிற்குத் தீர்க்கும் முறையிலேயும் இங்கு காகிதத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்குப் புனராலோசனை செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதற்குத் தேவையான மூலப் பொருள் அதிக அளவிற்கு இல்லை என்று முடிவு எடுக்கப் பட்டிருக்கிறது.

** 136 வினா.—**திரு. சு. துரைசாமி:*** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பாளையம் சேஷசாயி பேப்பர் மில்லில் மாநில அரசு எவ்வளவு ரூபாய் முதலீடு செய்துள்ளது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தமிழ் நாடு அரசாங்கம் சேஷசாயி பேப்பர் மில்லில் நேரடியாக முதலீடு எதுவும் செய்ய வில்லை. ஆனால் தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகம் அந்த பேப்பர் மில்லில் ஒரு கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளது.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய அரசாங்க நிறுவனத்தின் மூலமாக ஒரு கோடி ரூபாய் முதலீடு செய்திருக்கிறோம். அந்தக் கம்பெனியை ஆரம்பித்தவர்கள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

எவ்வளவு பங்குத்தொகை போட்டு இருக்கிறார்கள்? அந்தப் பங்குத்தொகையைவிட அரசாங்கத்தின் நிறுவனத்தின் மூலம் அளித்த தொகை அதிகமாயிருந்தால் அரசாங்கமே அதை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மற்றவர்கள் பங்குத் தொகை பற்றிய குறிப்பு என்னிடத்தில் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்தக் கூட்டுத்துறையிலே தொழிற்சாலை அமைப்பது என்பதற்கு முன்னுலேயே இம்மாதிரி சேஷசாயி பேப்பர் மில்லிற்கு 1 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அந்த ஒரு கோடி ரூபாயைத் திருப்பிப் பெறுவதற்கோ அல்லது அந்த ஒரு கோடி ரூபாய் கொடுத்திருப்பதால் அரசு கண்ட்ரோலை அதிகமாக வைத்து பள்ளிப்பாளையம் தொழிற்சாலையை நடத்த ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது கூட்டுத்துறை மூலம் ஆரம்பிக்கப்பட்டது அல்ல. 1967-க்கு முன்னுல் ஆரம்பிக்கப்பட்டது. அரசாங்கம் எந்தவிதமான பங்கு முதல் போடவில்லை. மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்தின் ஃபைனன்ஷியல் இன்ஸ்டிட்யூட்டிலே பணம் போடுகிறார்கள். இந்தக் கம்பெனியைப் பொறுத்தவரையில் மாநில அரசு நிதி நிறுவனம் ஒரு கோடி ரூபாய் முதலீடு செய்திருக்கிறார்கள். இதற்கேற்ற வகையில் இதிலே அவர்களுக்கு கண்ட்ரோல் இருக்கிறது.

All India Trade Test

* 137 *Q*.—THIRU R. R. MUNUSAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the All India Trade Test is being conducted in Madras City during 1971–72 ;

(*b*) if so, the subjects in which they are conducted; and

(*c*) the places where they are conducted?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ), (இ) & (உ) சட்ட மன்றத்தின் முன் ஒரு அறிக்கை * வைக்கப்பட்டுள்ளது.

அரக்கோணம் அருகிலுள்ள உருக்காலை

* 138 வினு.—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணத்திற்குப் பக்கத்தில் உள்ள ஸ்டீல் உருக்குத் தொழிற்சாலையின் வேலை துவக்கப்பட்டு விட்டதா?

---

* 117-120-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.